நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 345, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

345—

மாசுபடுதல்

***23930 திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, கத்தேரி ஊராட்சி, சாமியம்பாளையத்தில் சாயப் பட்டறைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளால் ஏற்படும் மாசினைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய புனித பாதங்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, கத்தேரி ஊராட்சி, சாமியம்பாளையத்தில், குடிநீரில் சாயப் பட்டறைக் கழிவுகள் கலக்காதவாறு மறுசுழற்சி செய்து, தொழிற்சாலையின் உற்பத்தித் தேவைக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதனை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரிடம் அறிவு உண்டு, பேரறிஞர் அண்ணாவிடம் ஆற்றல் உண்டு, புரட்சித் தலைவரிடம் வாரி வழங்கும் வள்ளல் குணம் உண்டு. மாண்புமிகு புரட்சித்*

2015 செப்டம்பர் 25]

தலைவி அம்மா அவர்களிடம் இவை எல்லாம் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) பல ஆண்டுகளில் செய்யும் அரும் பணிகளை இந்த நான்கு ஆண்டுகளிலேயே செய்து முடித்தவர் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) அருள் காட்டும் தாயே! எம் அம்மாவே, நீவிர் வாழ்க! இருள் நீக்கும் சுடரே, இதய தெய்வமே, நீவிர் வாழ்க! பொருள் இல்லா ஏழைக்கும், பொருள் தந்து, விரல் நீட்டும் திசையெங்கும் வெற்றி தரும் தாயே, தங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரி தொகுதி, கத்தேரி ஊராட்சி, சாமியம்பாளையத்தில் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாசில்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்கள். நாமக்கல், சேலம், கரூர், ஈரோடு மாவட்டங்களிலே குறு, சிறு, மற்றும் சாய, சலவைப் பட்டறைகளையெல்லாம் ஒருங்கிணைத்து ஒரு தொழில் சார்ந்த வளர்ச்சிக் குழுமம் மற்றும் பொது சுத்திகரிப்பு நிலையம் ரூபாய் 700 கோடி செலவிலே அமைக்கப்படுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த கூட்டத் தொடரிலே பேரவை விதி 110—ன்கீழ் அறிவித்திருந்தார்கள். அந்தத் திட்டத்தின் ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அத்திட்டம் செயல்பாட்டிற்கு வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியிலே இருக்கிற சாய மற்றும் சலவைப் பட்டறைகளையெல்லாம் அந்தப் பொது சுத்திகரிப்பு நிலையத்தின்கீழ் கொண்டு வருவதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமருகிறேன்.*

[2015 செப்டம்பர் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி கோவிலூர் பகுதியில் தமிழ்நாடு கெமிக்கல் தொழிற்சாலை இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆலையின் கழிவு நீரை எந்தச் சுத்திகரிப்பும் செய்யாமல் அப்படியே பக்கத்திலிருக்கக்கூடிய கண்மாயில் விடுகிறார்கள். அந்தப் பகுதி கண்மாய் மட்டுமல்லாமல், காரைக்குடி பகுதியின் குடிநீர் ஆதாரமாக மிகப் பிரபலமாக விளங்கக்கூடிய சம்பை ஊற்று முழுவதும் கழிவுநீரால் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் அந்த ஆலையை மூடவும், கழிவுநீரைக் கண்மாயில் விடக்கூடாது என்றும் தொடர்ந்து பல போராட்டங்களை நடத்தியும், கவனிப்பு இல்லாமல் அது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்யாமல் விடுகின்ற காரணத்தால் அந்தப் பகுதி முழுவதுமுள்ள குடிநீர் ஆதாரங்கள் மாசுபட்டும், நோய்கள் பரவக்கூடிய ஓர் அபாயமும் ஏற்பட்டிருக்கிறது. எனவே, உடனடியாக ஆய்வுகளை மேற்கொண்டு தமிழ்நாடு கெமிக்கல் ஆலையின் இயக்கத்தை நிறுத்தி, கழிவுநீரைச் சுத்திகரிப்பு செய்து, அதனால் பாதிப்பில்லை என்று உறுதி செய்யப்பட்ட பின்னால், அந்த ஆலை இயங்குவதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான விளக்கத்தை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 செப்டம்பர் 25]

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காரைக்குடியிலே தமிழ்நாடு கெமிக்கல் தொழிற்சாலையின் கழிவுநீர் பக்கத்திலிருக்கிற கண்மாயிலே கலப்பதாகத் தெரிவித்தார்கள். ஏற்கெனவே இப்படியொரு புகார் வரப்பெற்று அதுசம்பந்தமாக அந்த ஆலை ஆய்வு செய்யப்பட்டு, அந்த ஆலையின் சுத்திகரிப்பு நிலையங்களில் தகுந்த கருவிகளை நிறுவ வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையிலே சுத்திகரிப்புக்குண்டான அனைத்துக் கருவிகளையும் அந்த ஆலை தற்போது நிறுவி, ஆலையின் கழிவுநீரை மறுசுழற்சி மூலமாகச் சொந்த உபயோகத்திற்கே பயன்படுத்திக்கொள்கிறது. எந்த ஓர் ஆலைக்கும் அனுமதி கொடுப்பதற்கு முன்பாக அது ஆய்வு செய்யப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் திருப்பூரிலே ZLD என்கிற நிலையை உருவாக்கியுள்ளார்கள். இந்த அடிப்படையில் அந்த ஆலையும் ஆய்வு செய்யப்பட்டது. மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்பட வேண்டுமென்று அந்த ஆலைக்கு அறிவுறுத்தப்பட்டது. அந்த அடிப்படையிலே தற்போது அந்த ஆலையின் கழிவுநீர் அருகிலே இருக்கிற கண்மாயிலே கலப்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஆலையின் கழிவுநீர் கண்மாயிலே கலப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். அவ்வாறெனில் அது நேரடியாக ஆய்வு செய்யப்பட்டு, விதிமுறைகளை மீறுகின்றபட்சத்தில், அந்த ஆலையின்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.*

திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகிலுள்ள சதுப்பு நிலப் பகுதியான பள்ளிக்கரணை, நுண்ணுயிரிகள் இருக்கக்கூடிய உலகத்தின் மிகச் சிறந்த இடங்களுள் ஒன்று. ஏறக்குறைய 1,400 நுண்ணுயிரிகள் இருக்கக்கூடிய இடம். இயற்கைச் சமன்பாட்டை சரிசெய்யக்கூடிய முக்கியமான பகுதி. ஏற்கெனவே 5,000 ஹெக்டராக இருந்தது. தற்போது படிப்படியாகக் குறைந்து 700 ஹெக்டராக இருக்கிறது. இயற்கைச் சூழலை மிகப் பெரிய அளவில் பாதுகாக்கக்கூடிய மிகவும் புகழ்பெற்ற பகுதி. 120 கோடி ஆண்டுகளுக்கு முன்பு*

தோன்றிய நுண்ணுயிரிகள் இருக்கக்கூடிய ஒரு பகுதி. அங்கு குப்பை கொட்டப்படுகிறது. எனவே, மேலும் அங்கு குப்பைகளைக் கொட்டாமல் அந்த இடத்தைப் பாதுகாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பள்ளிக்கரணை பகுதியிலே நகராட்சியின் குப்பைகளைக் கொட்டுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நகராட்சி ஆணையர் அவர்களுக்கு அறிவுறுத்தி, அந்தப் பகுதியிலே குப்பைகளைக் கொட்டாமல் தடுப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது தொகுதிக்குட்பட்ட காரைக்குடியிலே தமிழ்நாடு கெமிக்கல் தொழிற்சாலை இயங்கி வருகிறது. அந்தத் தொழிற்சாலையின் கழிவுநீர் சுத்திகரிப்புச் செய்யப்படாமல் வெளியேற்றப்படுகின்ற காரணத்தினால் குடிநீர் மாசுபடுவதோடு, குடிநீரின் தன்மையும் கெட்டு விடுகிறது. அந்தக் கழிவுநீரின் காரணமாக 5,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற முடியாமல், தரிசாகக் கிடக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. அந்தத் தொழிற்சாலையினருக்கு பல முறை அறிவுரைகளை வழங்கியும், அவர்கள் இன்னும் அந்தக் கழிவுநீரைச் சுத்திகரிப்புச் செய்யாமலேயே வெளியிலே விடுகிறார்கள். ஆகவே, தமிழ்நாடு கெமிக்கல் தொழிற்சாலையின் இயக்கத்தை உடனடியாக நிறுத்தி, ஆய்வுக்குப் பின் அந்தத் தொழிற்சாலையை நடத்துவதற்கு ஆவன செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2015 செப்டம்பர் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பின், திருப்பூர் பகுதியிலே இருக்கக்கூடிய சாய, சலவைப் பட்டறைகள் மூலமாக நொய்யல் ஆற்றிலே கழிவுநீர் கலக்கிற சூழ்நிலைகளையெல்லாம் அறிந்து, சுத்திகரிப்பு முறையிலே பூஜ்ஜிய நிலையை அடையக்கூடிய ZLD என்று சொல்லக்கூடிய Zero Liquid Discharge என்ற முறையை இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழகத்திலே செயல்படுத்தியவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த அடிப்படையிலேதான் ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீரை உபயோகத்திற்கு எடுத்துக்கொள்கிறார்களோ, அந்தத் தண்ணீரை மீண்டும் மறுசுழற்சியின் மூலமாக அவர்களே திரும்பப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய ஒரு முறையை இன்றைக்கு அனைத்துத் தொழிற்சாலைகளும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஒரு சீரிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த முறை இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் கடைப்பிடிக்கப்படுவதில்லை; அது தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் மட்டும்தான் கடைப்பிடிக்கப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு தொழிற்சாலையின் உபயோகத்திற்கு ஒரு நாளைக்கு ஒரு கோடி லிட்டர் தண்ணீர் எடுக்கப்படுகிறது என்று சொன்னால், அதிலே 95 இலட்சம் லிட்டர் தண்ணீரை மறுசுழற்சி செய்து மீண்டும் அவர்கள் உபயோகத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்கிற ஒரு திட்டம்தான் ZLD என்று சொல்லக்கூடிய பூஜ்ஜிய கழிவுநீர் முறைத் திட்டம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற காரைக்குடி, தமிழ்நாடு கெமிக்கல் தொழிற்சாலை கழிவுநீரை முழுமையாக மறுசுழற்சி செய்யவேண்டுமென்றுதான் மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஆலையை மறு ஆய்வு செய்து, அதனுடைய கழிவுநீர் எந்த இடத்திலாவது கண்மாயிலே கலக்கக்கூடிய சூழ்நிலை இருக்கும்பட்சத்தில், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுத்து,*

அங்கு இருக்கிற நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 346, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

346—

புதிய பாலம்

***52040—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர்—குலத்தூர் நெடுஞ்சாலையில் புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடவூர்—குலத்தூர் நெடுஞ்சாலையில் புதிய பாலம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லையென்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையமாக உள்ள பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலே உள்ள வடக்குப் பிச்சாவரத்தையும், தெற்குப் பிச்சாவரத்தையும் இணைத்துப் புதிய பாலம் கட்ட*